**தலைப்பு 206 – கலாசார அலுவல்கள் திணைக்களம்**
---------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 206 – கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய பந்தியுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாத பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (ஆ) i | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படாத 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்குச் சொந்தமான 06 கட்டிடங்கள், மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,000,000 ஆன 02 வாகனங்கள் மற்றும் 3.348 ஹெக்ரேயர் அளவான 05 காணிகளின் கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | 1.6.1(ஆ) |
| 1.6.1(அ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் ''பீ' கணக்கில் வரவு மீதி மற்றும் திறைசேரி அச்சிடல் பிரதியின் பிரகாரம் வரவு மீதிகளுக்கு இடையே 2004 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 444,761 வேறுபாட்டை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1.6.1(அ) |

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணைக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் ‘‘பீ’ கணக்கில் வரவு மீதி மற்றும் திறைசேரி அச்சிடல் பிரதிகளின் படி வரவு மீதிகளுக்கு இடையே 2004 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 444,761 வேறுபாட்டை இனங்கண்டு கணக்ககளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2004 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 444,761 ஆன அந்த வேறுபாடு தற்போது பரீட்சிக்கப்படுவதுடன் 2024.12.31 இல் உள்ளவாறான கணக்குகள் தயாரிப்பதற்கு முன் அந்த பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அந்த வேறுபாடுகளை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 30 ஆந் திகதி 05/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் மேலும் அறிக்கையிட வேண்டிய நிதியல்லாச் சொத்துக்கள் காணப்படுமாயின் அவற்றை உரிய பிரகாரம் இனங்கண்டு கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியில் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற 06 கட்டிடங்களைக் கையேற்று கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 5,000,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட இரண்டு வாகனங்களின் உரித்தை கையேற்று கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்து திணைக்களத்திற்கு கையேற்று உடனடியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து உரிய பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்ற பின்னர் கணக்காய்விற்கு அறிக்கையிடுவதற்கும் மற்றும் 2024 இன் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் உரித்தைக் கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) கணக்காய்வு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை ரூபா 5,300 ஆன சிங்களம், ஆங்கிலம் சுருக்க அகராதிகளின் முதல் பாகத்தின் 62 பிரதிகள் நன்கொடையாகப் பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான பெயர் பதிவேடு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் ரூபா 227,900 பெறுமதியான 43 பிரதிகள் கையேற்கப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு உரிய மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகளை உரியவாறு மேற்கொள்ளாமையின் காரணமாக கலையரங்கத்தை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 150 மில்லியனை உள்ளடக்கிய 02 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு உரிய 09 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 168.9 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 164.98 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 97.7 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணிகள் இலங்கை கடற்படையினால் நிறைவேற்றிக் கொள்வதற்காக 2024.01.31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பில் அமைச்சின் அவதானிப்பை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவையின் 2024.02.22 ஆம் திகதிய கடிதம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான செலவின விடய இலக்கம் 206-02-03-16-2001 இன் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 155 மில்லியன் நிதியேற்பாடு முழுமையாக பயன்படுத்தும் வகையிலும், அரசாங்கத்திற்கு பொருளாதார நலன்களை ஏற்படுத்தும் வகையிலும் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த நிதியேற்பாட்டை சரியான பிரகாரம் பயன்படுத்துதவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) செலவின விடய இலக்கம் 206-2-02-2-1409 இன் கீழ் சாகித்திய போட்டிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 20 மில்லியன் நிதியேற்பாட்டில் பிரதேச மற்றும் மாவட்ட சாகித்திய விழாவிற்காக ரூபா 16.185 மில்லியன் மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக ரூபா 8.531 மில்லியன் செலவிடப்பட்டமையால் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் உள்ளபடியான செலவினங்களின் வேறுபாட்டின் முரண் 26 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலாக இருந்ததுடன் ரூபா 7.654 மில்லியன் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டமை அதற்கு காரணம் ஆகும். | தேசிய சாகித்திய விழா நடாத்துவதற்காக போதியளவான நிதியேற்பாடு காணப்படாமை மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் கடிதத்திற்கு இணக்கம் தெரிவித்து தேசிய சாகித்திய விழா நடத்தப்படாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் மதிப்பீட்டில் முன்னுரிமை வழங்கி மதிப்பீடு தயாரித்ததன் காரணமாகக் கொண்டு மிகை மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டமை காண்பிக்கப்பட்மையும் எதிர்வரும் ஆண்டுகளின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற செயற்பாடுகளின் பிரகாரம் எதிர்வுகூறல் மேற்கொண்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான ஆய்வுடன் மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 211(i) மற்றும் நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் சகல பொறுப்புக்களும் அவை ஏற்பட்ட உடன் பொறுப்புப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் 06 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய 2024 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 283,354 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (iii) பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உறுதிச்சீட்டுக்கள் பல்வேறு நடைமுறை நிலைமையின் கீழ் 2023 திசெம்பர் மாதம் கணக்கு தயாரிப்பதற்கு முன் சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தமையினால் 2023 இன் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்த போதும் 2024 இற்குரிய செலவின பேரேட்டில் 14 ஆவது நிரலில் முன்னைய ஆண்டின் கடப்பாடாக உரிய பிரகாரம் ரூபா 283,354 ஆன பெறுமதி குறிப்பிடப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் ஏற்பட்ட உடன் பொறுப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றைத் தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக ஈடுபடுத்துவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அந்த மீளாய்வினைச் எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | திணைக்களத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மற்றும் கணக்காளர் பதவியில் காணப்படுகின்ற வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு பல சந்தர்ப்பங்களின் போது கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கும் வகையில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு | தற்போது காணப்படுகின்ற சுற்றறிக்கைகளின் கீழ் உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக சேவையில் இருந்து விலகியமை மற்றும் ஓய்வு பெற்றுச் சென்றமை போன்ற காரணத்தின் அடிப்படையில் தகவல்களைப் பரீட்சிப்பதற்காக அதிக காலம் எடுத்ததன் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிலளிக்கப்பட்டிருக்வில்லை. | காரணமாக இந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிப்பது தாமதம் அடைந்திருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்குரியதாக விநியோகிக்கப்பட்ட 15 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு அந்த ஆண்டின் போது பதிலளிக்கப்பட்டுள்ளமையும் எதிர்காலத்தில் இந்த தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | உள்ளகக் கணக்காய்வாளர் உரிய பிரகாரம் உரிய கணக்காய்வு இலக்குகள் உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான முறைமை ஒன்று உள்ளமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை | உள்ளகக் கணக்காய்வாளரின் கீழ் வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கும் அதன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள் , விதிகள் மற்றும் பிரமானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு | ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) II ஆம் பந்தியின் 13.3 ஆம் பிரிவு | | பதிற்கடமை நியமிக்கப்படுதல் உள்ளபடியான பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படும் வரை தற்காலிக அடிப்படையிலாக மாத்திரம் இருந்த போதிலும் 2020 ஒக்தோபர் மாதம் முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற திணைக்களத்தின் கணக்காளர் பதவி பதிற்கடமை அடிப்படையில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மற்றும் கணக்காளர் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல சந்தர்ப்பங்களின் போது கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) XXIV அத்தியாயத்தின் 4.2, 4.3, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள் | 846,073 | மரணமடைந்த, வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற 54 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு உரிய பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடனை மேவுகை செய்தல் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் போது தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமானக் கோவை | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 188 மற்றும் 189 | 696,139 | 2017 முதல் 2019 யூன் வரையான காலத்தில் வைப்புச் செய்யப்பட்ட ஓய்வு பெறச் செய்யப்படாத 25 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் காணப்படுகின்ற வைப்புக்களுக்கு இடையே ரூபா 82,125 பெறுமதியான வைப்புக்கள் 2023 திசெம்பர் மாதத்தின் போது கணக்கு வைத்தமை சரி செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி காசோலைகள் வரமானத்திற்கு மீள எடுத்து கணக்கு வைத்தல் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்த பின்னர் உரிய சரி செய்தல்களை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி | 591,160 | கையளிக்கப்பட்ட பணிகளை பூர்த்தி செய்த உடன் கட்டுநிதி மீண்டும் தீர்க்க வேண்டியிருந்த போதிலும் கட்டுநிதி தீர்ப்பதற்கு 05 நாட்கள் முதல் 130 நாட்கள் வரையான கால வீச்சினை எடுத்திருந்தது. | உபகட்டு நிதி வழங்கும் போதும் மற்றும் தீர்க்கும் போதும் பேரேடு ஒன்று பேணிச் செல்லப்படுவதுடன் உங்களால் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் தற்போது அந்த பதிவேடு நாளது வரையாக்கி கொடுப்பனவு உறுதிச் சீட்டு இலக்கம் மற்றும் தீர்த்தல் உறுதிச்சீட்டு இலக்கமும் உள்ளடக்கி பதிவேட்டில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | 2,317,700 | முற்பணத்தை தீர்த்து வைக்காதிருக்கும் போது 74 சந்தர்ப்பங்களின் மீண்டும் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 571 | 4,120,526 | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஒப்பந்தங்களில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்ட நிதி வருமானத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படாத மற்றும் செலுத்துவற்கு பரிந்துரை கிடைக்காத ஒப்பந்த பணம் பின்தொடர் நடவடிக்கைகளின் பின்னர் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு | காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் 2019 நவம்பர் வரையான காலத்தில் 29 சந்தர்ப்பங்களின் போது வங்கியினால் நேரடியாக செலுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 810,606 தொகையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இனங்காணப்படாத கொடுப்பனவாக திருத்தப்பட்ட காசேட்டில் சீராக்கப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றை தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நேர் செலுத்துதல்கள் உடனடியாக இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய சாகித்திய விழா, அரச சாகித்திய விழா மற்றும் அதற்குரிய மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 20 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 18 மில்லியன் செலவிடப்பட்டு அரச சாகித்திய விழா, பிரதேச மற்றும் மாவட்ட சாகித்திய விழாக்கள் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் தேசிய சாகித்திய விழா நடாத்தப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட 2023.09.12 ஆந் திகதிய இலக்கம் TO/BE1/04/01/01/(2023-101) என்ற கடிதத்திற்கு இணக்கம் தெரிவித்தமை காரணமாக தேசிய சாகித்திய விழா நடாத்துவதற்கு முடியாதிருந்தமையால் ரூபா 1,870,762 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் | நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை உச்ச அளவில் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டிற்குரிய தேசிய சாகித்திய போட்டிகள் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தேசிய கலை விழா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் ரூபா 66 மில்லியனில் 10 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் நடாத்தப்படாதிருந்த ரூபா 8.7 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அரச நடன விழாவிற்காகவும் மற்றும் 1.8 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட பிரதேச கலாசார சங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கான 02 செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் முறையே ரூபா 2.05 மில்லியன் மற்றும் 2 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு நடாத்தப்படாத அரச சங்கீத சம்மேள விழாவிற்காக மீளாய்வாண்டின் போதும் ரூபா 6 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அந்த செயற்பாடுகளில் மற்றும் ரூபா 6 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அரச விருது விழாவில் ரூபா 1.4 மில்லியன் செலவினத்தில் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அரச சங்கீத விழா மற்றும் அரச தொலைக்காட்சி விருது விழா என்ற விழாக்களை நடாத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2023.09.12 ஆம் திகதிய கடிதம் மற்றும் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் இந்த விழாக்கள் நடத்தாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை உச்ச அளவில் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் நிதியேற்பாட்டை ஒதுக்கும் போது கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் தொடர்பாக கவனத்தில் கொண்டு மீளாய்வாண்டின் போது நிதியேற்பாட்டை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | எழுத்தாளர்களின் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3 மில்லியன் நிதியேற்பாடு போதாது இருந்ததாக குறிப்பிட்டு அந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படாமல் அந்த நிதியேற்பாடு தேசிய கைப்பிரதிகள் போட்டியில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்குரிய வெற்றியீட்டிய கைப்பிரதிகளை அச்சிடுவதற்காக | எழுத்தாளர்கள் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 03 மில்லியன் நிதியேற்பாடு போதியளவில் இல்லாததாக குறிப்பிட்டு அந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தப்படாமல் அந்த நிதியேற்பாடு தேசிய | திட்டங்களைத் தயாரிக்கும் போது நிதியேற்பாட்டை போதியளவான வகையில் திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திட்டமிடப்பட்ட போது கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் அந்த நிகழ்ச்சித் திட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கைப்பிரதிகள் போட்டியில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய வெற்றியீட்டிய பிரதிகளை அச்சிடுவதற்காக திட்டமிடப்பட்ட போதிலும் கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. 2024 ஆம் ஆண்டில் இந்தப் பணிகளுக்காக தற்போது பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை எழுத்தாளர் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 10972 புத்தகங்கள் மற்றும் விற்பனைக்காக அச்சிடப்பட்ட களஞ்சியத்தில் எஞ்சியுள்ள ரூபா 27,867,824 பெறுமதியான மும்மொழிகளிலும் மற்றும் 166 வகைகளை உடைய திணைக்களத்தின் வெளியீடுகளில் 49,532 புத்தகங்களும் ஆக கூட்டுமொத்தமாக 60,504 புத்தகங்கள் களஞ்சிய இருப்பு அறிக்கையின் பிரகாரம் காணப்பட்ட போதும் அந்த புத்தகங்களை உரிய பிரகாரம் வகைப்படுத்தி பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | அந்த புத்தங்கங்களை உரிய பிரகாரம் வகைப்படுத்தி உரிய தொகுதியின் கீழ் உரியவாறு கணிப்பீடுகளை மேற்கொண்டு காணப்படுகின்ற ஊழியர் எண்ணிக்கை மற்றும் செலவின முகாமைத்துவத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் போது ஏதாவது வசதியீனம் எழுமாயின் அந்த ஆண்டின் போது உரிய பிரகாரம் நியமிக்கப்பட்ட குழு ஒன்றின் ஊடாக பௌதீக கணிப்பீட்டை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | புத்தக களஞ்சியத்தில் காணப்படுகின்ற சகல புத்தகங்களும் உரிய பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு பௌதீக ரீதியில் காணப்படுகின்ற மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

திணைக்களத்திற்கு விநியோகிக்கப்பட்ட கீழே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2024 யூன் 18 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான விபரம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முற்பண கொடுப்பனவு பரிசோதனை - 2023<br>(ஆ) திணைக்களப் புத்தகங்கள் விற்பனை கடைகளில் வருமானம் பரிசோதனை - 2023<br>(இ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு பரிசோதனை - 2023<br>(ஈ) வரைவு செயலாற்றல் அறிக்கை, வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் காலாண்டு ரீதியான செயல் முன்னேற்ற அறிக்கை தொடரபான பரிசோதனை - 2023<br>(உ) நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு - 2023 | தற்போது காணப்படுகின்ற சுற்றறிக்கையின் கீழ் உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக சேவையில் இருந்து அகற்றுதல் மற்றும் ஓய்வு பெற்றுச் செல்லல் போன்ற காரணத்தின் அடிப்படையில் தகவல்களைப் பரீட்சிப்பதற்காக அதிக காலம் எடுத்தமையின் காரணமாக இந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்காக தாமதம் அடைந்திருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்குரியதாக விநியோகிக்கப்பட்ட 15 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் அந்த ஆண்டின் போது பதிலளிக்கப்பட்டிருந்தமையும் எதிர்காலத்தில் அந்த தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்துரைக்கப்பட்ட கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய கையெழுத்துப் பிரதி போட்டியில் வெற்றிபெற்ற கையெழுத்துப் பிரதிகளை அச்சிடுவதற்காக முதலாவது தடவையில் மேற்கொள்ளப்பட்ட பெறுகை செயற்பாட்டின் போது 3000 கைப்பிரதிகள் ரூபா 364,650 தொகையில் மேற்கொள்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் அந்த செயற்பாடுகளில் இடம்பெற்ற மோசடிகளின் காரணமாக | 2016 ஆம் ஆண்டில் வெற்றிபெற்ற கையெழுத்துப் பிரதிகள் அந்த ஆண்டின் போதே அச்சிடுவதற்கு கால வீச்சு போதியளவில் காணப்படவில்லை. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் அச்சிடுவதற்கு முடியாமல் இருந்தமையால் 2017 ஆம் ஆண்டின் போது இந்த பணிகள் நிறைவேற்ற வேண்டியிருந்த போதும் | திட்டமிடல்களுடன் நிதியேற்பாடுகளை ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் சனவரி மாதம் மீண்டும் இரண்டாவது தடவை கூறுவிலை கோரும் போது 3000 புத்தகங்களுக்கா ரூபா 1,079,500 தொகை செலுத்தி 07 வருடங்களுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முதலாவது தடைவ மேற்கொள்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டமையினால் ரூபா 714,850 நிதி நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | இதற்கான நிதியேற்பாடு கிடைக்காமையும் 2018 ஆம் ஆண்டின் போது இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காக பெறுகைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களினால் அச்சிடல் பணிகள் தாமதமடைந்திருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஜோன் த சில்வா நினைவு மண்டபத்தை நவீனமயப்படுத்தி அபிவிருத்தி செய்யும் கட்டம் I இற்குரிய ஒப்பந்தகாரரால் 03 வருட கால தாமதத்துடன் அதாவது 2018 நவம்பர் 24 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்து கட்டடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் தாமதக் கட்டணமாக அறவிடப்பட்ட ரூபா 38,658,734 தொகை உரிய அங்கீகாரம் மற்றும் நியாயமான விடயங்களை உறுதிப்படுத்தாமல் மீண்டும் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டதுடன் அந்த தொகையை மீண்டும் செலுத்துமாறு 2021 மே 10 ஆந் திகதி ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையும் அந்த தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் விடயங்கள் அனுப்பபட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இலங்கை தேசிய பிணக்குகள் தீர்த்தல் நிலையத்திற்கு இருதரப்பினரையும் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாக பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை ஸ்தாபிப்பதற்கு மீளாய்வாண்டு வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மற்றும் கணக்காளர் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல சந்தர்ப்பங்களின் போது கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |